இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது எலிசபெத்து வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது எலிசபெத்து உரத்த குரலில், “பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. (லூக்கா 1: 40-45 )

# யூபிலி ஆண்டின் புனிதக் கதவுகள் திறக்கப்படும்



வத்திக்கான்: 2025ஆம் ஆண்டின் யூபிலிக் கொண்டாட்டங்களையொட்டி பேராலயங்களிலும் தேசிய திருத்தலங்களிலும் புனிதக் கதவுகள் திறக்கப்படுவது குறித்த விதிமுறைகளையும் விவரங்களையும் வெளியிட்டுள்ளது திருப்பீடம்.

வழக்கப்படி உரோம் நகரிலுள்ள 4 பாப்பிறை பெருங்கோவில்களிலும், திருத்தந்தையின் விருப்பப்படி, சிறைக்கைதிகளுடன் நெருக்கத்தை வெளிப்படும் விதமாக ஒரு சிறைச்சாலையிலும் புனிதக் கதவுகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வெளியிட்ட திருப்பீடத்தின் நற்செய்தி அறிவிப்புக்கான துறை, யூபிலி ஆண்டின்போது உலகிலுள்ள மறைமாவட்ட பேராலயங்களிலும், பன்னாட்டு மற்றும் தேசிய திருத்தலங்களிலும், ஏனைய முக்கியத்துவம் நிறைந்த வழிபாட்டுதலங்களிலும் புனிதக் கதவுகள் திறக்கப்படும் என அதில் தெரிவிக்கிறது.

ஒப்புரவு அருள்சாதனம், பிறரன்பு மற்றும் நம்பிக்கை நடவடிக்கைகளின் வழி, இறைவனின் வரையறையற்ற அன்பிலிருந்து வரும் பாவமன்னிப்பை இந்த யூபிலி ஆண்டில் புனித கதவுகள் வழிச் செல்வது வழங்கும் என்பதைச் சுட்டிக்காட்டும் இந்த அறிக்கை, அருளின் இந்த நேரத்தை அனைவரும் முற்றிலுமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் அழைப்புவிடுக்கிறது.

யூபிலி ஆண்டானது கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முந்தைய நாளில் உரோம் நகர் புனித பேதுரு பெருங்கோவிலின் புனித கதவு திறக்கப்படுவதுடன் துவங்க உள்ளது.

அதன்பின் டிசம்பர் மாதம் 29ஆம் தேதி உரோம் மறைமாவட்ட பேராலயமான புனித ஜான் இலாத்ரன் பெருங்கோவில் புனித கதவு திறக்கப்படுவதைத் தொடர்ந்து, அதே நாளில் உலகிலுள்ள அனைத்து மறைமாவட்ட பேராலயங்கள் மற்றும் துணை பேராலயங்களின் புனித கதவுகள் திறக்கப்படும்.

இறைவனின் அன்னையாம் மரியன்னை திருவிழாவன்று, அதாவது ஜனவரி முதல் தேதி, உரோம் நகரின் புனித மேரி மேஜர் பெருங்கோவில் புனித கதவு திறக்கப்பட்டபின், ஜனவரி 5ஆம் தேதி, அதாவது திருக்காட்சி திருவிழாவுக்கு முந்தைய நாள், உரோம் நகரின் புனித பவுல் பெருங்கோவில் புனித கதவு திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் தேதி புனித ஜான் இலாத்ரன், புனித மேரி மேஜர், புனித பவுல் பெருங்கோவில்களுடன் உலகின் அனைத்து மறைமாவட்ட பேராலயங்களின் கதவுகளும் மூடப்படும் என அறிவிக்கும் நற்செய்தி அறிவிப்புக்கான திருப்பீடத்துறை, 2026 ஜனவரி 6ஆம் தேதி திருக்காட்சி திருவிழா கொண்டாட்டத்தின்போது யூபிலி ஆண்டு அதிகாரப் பூர்வமாக நிறைவுக்கு வரும் எனவும் அறிவிக்கிறது.

*- கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்*

## யூபிலி ஆண்டு எதிர்பார்ப்புகளில் ஒன்று, போர் நிறுத்தம்

வத்திக்கான்: வரும் 2025-ம் ஆண்டு சிறப்பிக்கப்பட விருக்கும் யூபிலி ஆண்டு, அனைத்து மக்களுக்குமான உண்மையான மனமாற்றத்தின் காலத்தைக் கொணரும் என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ளார் திருத் தந்தை பிரான்சிஸ்.

இத்தாலிய எழுத்தாளர் பிரான்செஸ்கோ அந்தோனியோ க்ரானா அவர்கள் எழுதிய ‘எதிர்நோக்கின் யூபிலி’ என்ற நூலுக்கு அணிந்துரை எழுதிய திருத்தந்தை அவர்கள், அமைதியால் அடையாளப்படுத்தப்படும், ஆயுதங்கள் கைவிடப்படும், மரணங்களால் இலாபத்தைக் கொடுக்கும் ஆயுத தயாரிப்புகள் நிறுத்தப்படும், தூக்குதண்டனைகள் இல்லாததாகும், சிறைக்கைதிகளுக்கு கருணை மன்னிப்பு வழங்கப்படும் என அனைத்தும் நிறைந்த ஓர் உலகை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருக்கிறோம் என எழுதியுள்ளார்.



போர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அனைத்து நாடுகளிலும் போர் நிறுத்தம் இடம்பெறவேண்டும் என்ற ஆவலுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதாக இந்த யூபிலி ஆண்டு இருக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்ட திருத்தந்தை, எந்த ஒரு போரிலும் மோதலிலும் வெற்றிகண்டவர்கள், தோற்றவர்கள் என்று எவரும் இல்லை, அனைவருமே இங்கு தோல்வியடைந்தவர்களே என்பதை மனதில் கொள்ளவேண்டும் என மேலும் அந்த அணிந்துரையில் எழுதியுள்ளார்.

# கேமரன் மலையில் உள்மனக் காயங்கள் ஆற்றும் உள்ளிருப்பு தியானம்

மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன், எங்கிருந்து எனக்கு உதவி வரும், விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடம் இருந்தே எனக்கு உதவி வரும் என்ற திருப்பாடல் 121 ஏற்ப இந்த முறை **Cameron Highlands** நோக்கி உயர்த்தினோம். ஆம், கடந்த நவம்பர் 16 சனிக்கிழமை தொடங்கி நவம்பர் 20 புதன் கிழமை வரை, 5 நாள் உள்மனக்காயங்கள் ஆற்றும் உள்ளிருப்பு தியானம் (Inner Healing Retreat) தங்கும் வசதியுடன் பினாங்கு மறைமாவட்ட தமிழ் அருங்கொடை தலைவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. மூவொரு இறைவனின் இரக்கம், நாம் அவர் மேல் வைக்க கூடிய நம்பிக்கை, திருஅவை மேன்மை, திருப்பலியின் மகத்துவம், நம்முடைய பாவம், மன்னிப்பு இறைவார்த்தையின் வல்லமை, குடும்பத்தில் விசுவாசம், கணவன் மனைவி உறவு, பாவத்தின் விளைவுகள், பாவத்தின் பரிகாரம், இரக்க செயல்கள், புது வாழ்வு என்ற பல கருத்தரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அனுதினமும் திருப்பலி, செபமாலை நற்கருணை ஆராதனை, புகழ் ஆராதனையும் இடம் பெற்றது. ஒரு நாள் பாவ மன்னிப்பு, ஒரு நாள் உடல் சார்ந்த



நோய்கள் குணமளிப்பும் மற்றொருநாள் உள்மனக் காயங்கள் குணமளிப்பும் இறுதி நாளில் அனைவருக்கும் அபிஷேக எண்ணெயால் ஆசீர்வதிக்கப்பட்டு ஜெரிக்கோ செபத்தோடு நிறைவடைந்தது.




வழிநடத்துதலால் அன்னை மரியாவின் பரிந்துரையோடும் சிறப்பாக எந்தக் குறையுமின்றி நடைப்பெற்றது.

சுமார், 150 மக்கள் இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்குப்பெற்றனர். நல்ல ஆயன் நானே என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப இந்த 150 மக்களை வழிநடத்திட கடல் கடந்து இந்திய மண்ணிலிருந்து, டிவைன் மெர்சி தியான இல்லம் எளாவூர் (Divine Mercy Retreat Centre, Elavur) இருந்து வருகையளித்த அருட்தந்தை வர்கிஸ் மற்றும் அருட்தந்தை தானியல் இருவரும் சிறப்பாகவும் வல்லமையாகவும் வழிநடத்தினர். நம் நாட்டிலிருந்து ஆராவ் தேவாலயத்தை சார்ந்த மறைதந்தை பிரான்சிஸ் சேவியர் அவர்களும் பங்குப்பெற்றனர்.

இறைவனின் அன்பு, கருணை,

- கிளமெண்ட் யேசுதாஸ்




**திருமண வாழ்வு மகிழ்ச்சியாக மாற நாம் மூன்று மேசைகளை நம் வாழ்வில் கொண்டு வர வேண்டும் அவற்றை பின்பற்றினால் திருமண முறிவு வருவது கிடையாது**

1.முதல் மேசை கடவுளின் பலிபீடம் கணவன் மனைவியாக நாம் கடவுளின் பாதத்தில் அமர்ந்து நாம் ஜெபிக்கும்போது அந்த குடும்பம் இறைவனுக்கு பிரமாணிக்கம் உள்ள குடும்பமாக மாறுகிறது. கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள உடன்படிக்கை உறவை பிரதிபலிக்கிறது. ஒரு விசுவாசத்தின் குடும்பமாக அது மாறுகிறது.

2. இரண்டாம் மேசை சாப்பாடு மேசை இன்றைய காலத்தில் நாம் பாராட்ட மறந்து விடுகிறோம் மனைவி எவ்வளவு கஷ்டப்பட்டு காலை முதல் இரவு வரை நமக்காக உணவு தயாரிக்கிறார்கள் எனவே நாம் அந்த உணவை உண்ணும்போது அன்பு மனைவியிடம் என் அன்பே இன்று உணவு நன்றாக உள்ளது என்று பாராட்டுவோம். அது அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியை அளிக்கும். தனி தனியாக உணவு அருந்தாமல் ஒற்றுமையாக ஒரே மேசையில் அன்பை பகிர்ந்து உணவு உண்ணும் போது ஒரு இன்னகமான உறவு வலு பெறுகிறது

3.மூன்றாவது மேசை படுக்கை அறை திருமணம் வாழ்வு முறிவதற்கு முக்கிய காரணம் தொடுதல் இல்லாமை கடவுள் மனைவிக்கும் கணவனுக்கும் நெருக்கத்தைக் கட்டியெழுப்ப உதவும் வகையில் கடவுள் அன்பு வெளிப்பாட்டை வடிவமைத்தார். பலவேளை இருவரும் பிரிய காரணமாக இந்த தொடுதல், கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இல்லாததால் அவர்களால் எதையும் வெளிப்படையாக பேச முடியாமல் மனத்தாழ்மை மற்றும் கருத்து வேறுபாடு வந்துவிடுகிறது

எனவே இந்த மூன்று மேசைகளையும் நம் வாழ்வில் பயன்படுத்தி திருமண வாழ்வை கடவுளுக்கு உகந்த வாழ்வாக வாழ்வோம்....கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்."

அருட்பணி. அருள் ஜேசு தாஸ்
சென்னை மயிலை உயர் மறை மாவட்டம்



**இயேசுவின் பிறப்பு புதிய எதிர்நோக்கின் விடியல்**

தேடல் இல்லாத நாளில்லை, தேடல் இல்லாத வாழ்வில்லை. முதல் பெற்றோர்களின் தவறான தேடல் பாவத்தையும் துன்பத்தையும், கடவுளோடான உறவில் விரிசலையும், உலகில் சாவையும் தேடித் தந்தது. அன்று முதல் கடவுள் மனிதனைத் தேடலானார். மானிடமகனாக உலகிற்கு வர தீர்மானித்தார்.

காலம் நிறைவேறியபோது, கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமை யின் வடிவை ஏற்று மனுவுருவானார்.

**ஹெரால்டு வாசகர்கள் அனைவருக்கும் இயேசு பிறப்பு பெருவிழா வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.**



## கிறிஸ்து பிறப்பு பெருவிழாவில் புலம்பெயர்ந்தவர் வரவேற்கப்பட வேண்டும்!

### திருத்தந்தை வேண்டுகோள்

# மனுக்குல விடியலுக்கு மனிதநேயம் ஏற்போம்!

இன்று திருஅவை, திருவருகை காலத்தின் நான்காம் வாரத்தைக் கொண்டாடுகிறது. முதல் வாசகத்தில், இஸ்ராயேல் மக்களை ஆளும் அரசராக, அவர்களை வலிமையோடு வழிநடத்தும் ஆயனாக, இயேசுகிறிஸ்து பெத்லகேமில் பிறக்கவிருப்பதை இறைவாக்கினர் மீக்கா வழியாக கடவுள் முன்னறிவிக்கின்றார்.

இரண்டாம் வாசகமானது "உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன்" என்று தன்னுடலை தியாகபலியாக்கி நம்மை தூய்மைபடுத்திய இயேசுவின் உன்னதப் பலியை நினைவூட்டுகின்றது. கடவுளுக்கு நாம் கொடுக்கும் விலையுயர்ந்த காணிக்கைகளைவிட அவரது திருவுளத்தை நிறைவேற்ற நம் உள்ளத்தை அவருக்கு கொடுப்பதே சிறந்தபலி என்றறிகிறோம்.

நற்செய்தியில் அன்னை மரியா இன்று பிறர் நலம் பேணும் புதிய பரந்த சமூக சிந்தனையைக் கற்றுக் கொடுக்கிறார். அன்னை மரியாவும் எலிசபெத்தும் இருவரின் அன்பு சந்திப்பு பிறக்கப் போகும் இரு குழந்தைகளைப் பிறருக்காக தங்களையே வழங்கும் குழந்தைகளைச் சுமக்கிறார்கள்.

திருவருகைக்காலத்தின் கடந்த வாரங்களில் நாம் கொண்டாடிய எதிர்நோக்கு, அமைதி, மகிழ்ச்சி என்ற மூன்று வாரங்களுக்கும் ஒரு நிறைவான வாரமாக இன்று நாம் கொண்டாடுவது அன்பின் வாரம். அன்பே அனைத்திறகும் ஆரம்பம்..

கிறிஸ்து பிறப்பினை முன்னறிவிக்கின்றது இன்றைய முதல்வாசகம். அன்பிற்காக பலியான கிறிஸ்துவின் இறப்பினை நமக்கு நினைவுபடுத்துகிறது இன்றைய இரண்டாம் வாசகம். எலிசபெத்தை சந்தித்து மனித நேயத்துடன். உதவி செய்ய விரைந்த அன்னைமரியாளின் அன்பினை நமக்கு சுட்டிக்காட்டுகிறது இன்றைய நற்செய்தி.

அன்னை மரியைப் போல, பகிர்தலே உண்மையான கிறிஸ்மஸ் விழா என்பதை உணர்ந்து ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன்னிடம் உள்ளதை இல்லாதவருடன் பகிர்ந்து ஏழை எளியோரில் கிறிஸ்துவை கண்டு வறியோரை ஆதரித்து கருணை உள்ளத்துடன் உதவி நல்கப் புறப்பட வேண்டும். நமது அன்றாட வாழ்க்கையில் பலதரப்பட்ட மக்களை சந்திக்கின்றோம். அவர்களில் ஏழைகளாக, எளியோர்களாக, நோயாளிகளாக, புறக்கணிக்கப்பட்டவர்களாக, வாழ்ந்து வருவதை நிச்சயம் நாம் அறிவோம்.

அவர்களுக்கு உதவும் நல்ல தருனம், தக்கதொரு காலம் இந்த நான்காம் திருவருகைக் காலத்தின் நற்செய்தி வலியுறுத்துகிறது. தேவைப்படுவோருக்கு தக்க தேவைகளை பூர்த்தி செய்யும் காலத்தில் கிறிஸ்து பெருவிழாவை நம் குடும்பத்தோடு கொண்டாடுகையில் இயேசு நமக்கும் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறார். இந்த நான்காவது திருவருகை காலத்தில் இயேசுவை ஆவலோடு எதிர்பார்த்து மகிழ்ச்சியைப் பெற பிறரன்பு செயல்களோடு விழிப்பாய் துணை புரிவோம்.

கிளிஸ்துவின் வருகை நமக்கொரு விடிவெள்ளி.

ஆ.வி.டேவிட். குளுவாங்



**திருவருகைக்காலம் - 4-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | மிக்கா 5:2-5 |
| திரு.பாடல் | 80:1-2b.14-15.17-18 |
| 2-ம் வாசகம் | எபி10: 5-10 |
| நற்செய்தி | லூக்கா 1:39-45 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 4**